# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2064/54 - 2018 අප්‍රේල් මස 01 වැනි ඉරිදා - 2018.04.01

*2064/54 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டம்**

*10 (1) (ஆ) (x) ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதிகள்*

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் (ஆ) பந்தியின் (X) உப பந்தியினால் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம், திசாநாயக்க முதியான்சேலாகே லலித் ஐவன் திசாநாயக்க ஆகிய நான், ஆளொருவரின் வருமானத்தைக் கணக்கிடும்போது கழிப்பனவு செய்யப்படலாகாத வரி மற்றும் ஏனைய விதிப்பனவுகளை இதன் கீழான அட்டவணை மூலம் நிச்சயப்படுத்தி இவ்வறிவித்தலை விடுக்கின்றேன்.

டீ. எம். எல். ஐ. திசாநாயக்க,
உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,
கொழும்பு 02,
2018, ஏப்பிறல் 01.

**அட்டவணை**

ஆளொருவரின் வருமானத்தைக் கணக்கிடுவதில் கழிப்பனவு செய்யப்படலாகாத வரி அல்லது ஏனைய விதிப்பனவுகள் :-

(i) இரட்டை வரி தவிர்ப்புக்காக இலங்கை அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒப்பந்தம் நடைமுறையிலுள்ள நாடொன்றின் வருமான வரி அல்லது சிறப்பு வரி அல்லது மிகை வரி அல்லது அவ்வரிகளுக்கு ஒத்த தன்மையதான வேறு வரி (81 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் (ஆ) பந்தியில் இலங்கையின் வருமான வரி தொடர்பில் வரவு வைக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள உச்ச தொகைக்கு மேற்படுகின்ற அத்தகைய ஏதேனும் வருமான வரி அல்லது சிறப்பு வரி அல்லது மிகை வரி அல்லது அவ்வரிகளுக்கு ஒத்த தன்மையதான வேறு வரி மேலதிகங்கள் தவிர) ; அல்லது

(ii) 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டணச் சட்டத்தின்கீழ் அறவிடப்பட்டுள்ள ஏதேனும் பொருளாதார சேவைக் கட்டணம் ; அல்லது

(iii) *2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச்சட்டத்தின்* IIIA *ஆம் அத்தியாயத்தின் கீழ் அறவீடு செய்யப்படும் நிதிச்சேவைகளின் மீதான ஏதேனும் பெறுமதிசேர் வரி மற்றும் 2009 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அறவிடப்படும் நிதிச் சேவைகளின் மீதான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி ; அல்லது*

(iv) *2013 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின்* IV *ஆம் பகுதியின் 14 ஆவது பிரிவின் கீழ் அறவீடு செய்யப்படும் ஏதேனும் பயிர்ச்செய்கை காப்புறுதி வரி ; அல்லது*

(v) *2015 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் விதிக்கப்பட்டு அறவிடப்படும் மாளிகை வரி, அர்ப்பணிக்கப்பட்ட விளையாட்டு அலைவரிசை அறவீடு, செய்மதி அமைவிட அறவீடு, செல்லிடத் தொலைபேசி தொழிற்படுத்துனர் அறவீடு, (கசினோ) சீட்டாட்டத் தொழில் அறவீடு, மதுச்சாலைகள் மற்றும் தவறணைகள் அறவீடு, அதியீட்ட வரி ஆகியன.*

*5-185*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*